# ஒரு இனிய வெற்றி பயணம்

## அடையார் ஆனந்த பவன்








சென்னையில் வசிப்பவர்களுக்கு அடையார் ஆனந்த பவன் பற்றிய அறிமுகமே தேவையில்லை. நகர் பகுதியில் மஞ்சள் மற்றும் நீல வண்ண அடையாளப் பலகை கொண்டு எங்குப் பார்த்தாலும் இருக்கும் இந்த ஸ்வீட் கடை மற்றும் உணவகம், எல்லா நேரங்களிலும், எல்லா வித காரணங்களுக்காகவும், விசேஷங்களுக்காகவும் செல்லும் ஒரு இடமாக உள்ளது. ஒடிஸாவில் யாரையாவது பார்க்க செல்கிறீர்களா? வேலையில் யாரேனும் பிரதிநிதிக்கு ஏதேனும் பரிசு கொடுக்க வேண்டுமா? மதுரை-பெங்களூரு செல்லும் வழியில் உடனடியாக கொறிக்க ஏதாவது வாங்க வண்டியை நிறுத்த வேண்டுமா? விழா/விசேஷ நாட்களில் அறுசுவை ஸ்வீட் பரிசுகள் வேண்டுமா? கவலை வேண்டாம். AAB அல்லது A2B உங்களுக்காக எப்போதும் இருக்கும்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் ஸ்வீட் மற்றும் கார வகைகளை கவனமாக தேர்வு செய்து தன் உணவுப்பட்டியலின் உள் அடக்கியுள்ள A2B, கடந்த 35 வருடங்களாக தனக்கென்று ஒரு இடம் பிடித்துக் கொண்டது மட்டுமன்றி, அதிவேக வளர்ச்சியும் அடைந்துள்ளது. இந்த உணவகச் சங்கிலி உலகம் முழுவதும் பரவியிருப்பதால், வரைபடத்தில் எங்கு எல்லாம் இருக்கிறதோ, அங்கு வசிக்கும் நம் மக்கள் A2B-யை தம் இன்னொரு வீடாகவே பார்க்கின்றனர். ஆண்டுக்கு 1000 கோடி வருமானம் கொண்ட இந்த நிறுவனம், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, யூகே, கென்யா, சிங்கப்பூர் போன்ற பெரு நாடுகளில் 20 உணவகங்களைக் கொண்டுள்ளது. இந்தியாவில், 160 கிளைகளில் 14000 தொழிலாளிகளைக் கொண்ட இந்த நிறுவனம், முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த அதே ஆர்வத்துடன் இன்றும், தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறது.

A2B-யின் வெற்றிக்கு பின்னால் இருக்கும் சிறந்த மனிதர்களான ஸ்ரீ.கே.டி.வெங்கடேசன், மற்றும் ஸ்ரீ.கே.டி.சீனிவாச ராஜா சகோதரர்கள், நம் கலந்துரையாடலில் A2B-யின் துவக்கம், வளர்ச்சி, அவர்களின் கொள்கைகள் மற்றும் இன்னும் பல நினைவுகளைப் பகிர்ந்தனர்.
விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்த ஸ்ரீ.கே.எஸ்.திருப்பதி ராஜா அவர்கள், கொடூரமான வறட்சி தாக்கியதால், பிழைப்பு நடத்த பலவற்றை முயன்று பார்த்து, பின் 1970ல் அவர்களின் சின்ன ஊரில் 'குரு ஸ்வீட்ஸ்' என்ற ஸ்வீட் கடையை ஆரம்பித்தார். அவரின் மனைவி வீட்டிலேயே ஸ்வீட்ஸ் செய்தும், விவசாயத்தையும் கடையையும் சமாளிக்க மிகவும் கஷ்டப்பட்டும், இரண்டுமே பெரியதாக எந்த நல்ல லாபமும் தரவில்லை. தொழில்முனைவுத் திறன் என்பது நம்மை பல இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பாதை ஆகும். ஸ்ரீ.கே.எஸ்.திருப்பதி ராஜா அவர்கள் விஷயத்தில், அவர் குரு ஸ்வீட்ஸ் கடையை மூடிவிட்டு, 1980-ல் பெங்களூருக்கு இடமாற்றம் செய்து அங்கு சீனிவாசா ஸ்வீட்ஸ் என்ற கடையைத் திறக்க முடிவு செய்தார். சகோதரர்கள் குடும்பத் தொழிலில் உதவி செய்யவும், தம் பெற்றோரிடம் தொழிலைக் கற்றுக் கொள்ளவும் பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டனர்.

குடும்பம் பல வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டது, ஆயினும் நல்ல பலன் கிடைக்கவில்லை. 1988-ல், ஸ்ரீ.கே.எஸ்.திருப்பதி ராஜா மீண்டும் இன்னும் பல வகை முயற்சிகள் செய்ய முடிவு செய்தார்.
நல்ல சூழலில் ஒரு இடம் என்ற அவரின் தேடல் அவரை வட சென்னைக்கு அழைத்து வரச் செய்து, 1988-ல் வண்ணாரப்பேட்டையில் மூன்றாவது கடையான 'ஸ்ரீ ஆனந்த பவன்' திறக்கப்பட்டது. அதன் பிறகு, அவர்களின் நிறுவனம் சிறப்புமிக்க வரலாறாக மாறியது பற்றி சொல்ல தேவையில்லை. மூன்றாவது முறை அதிர்ஷ்ட தேவதை அவர்கள் பக்கம் இருக்க, அவர்களின் விடாமுயற்சியால் பெருகி வந்த வாடிக்கையாளர்களுக்காக, கீழ்பாக்கம் மற்றும் அடையாரில் புதிய கிளைகள் திறக்கப்பட்டு, வியாபாரமும் பெருகியது.
பின் ஸ்ரீ.கே.எஸ்.திருப்பதி ராஜா தம்பதியினர் வியாபாரத்தை தன் இரு மகன்களிடம் ஒப்படைத்து விட்டு அவர்கள் பின்னிருந்து வழிக்காட்டினர்.

ஸ்ரீ.சீனிவாச ராஜா ஆரம்பக் காலங்களை நினைவு கூறுகையில், அடையாறில் அப்போது பல ஸ்வீட் கடைகள் இருந்தபோதும், ஆனந்த பவன் இருந்த நல்ல பகுதியில், அவர்கள் அங்கு நன்றாகவே தம் தடம் பதித்ததாக சொல்கிறார். அடையாறின் சிறப்பான புகழ் பெற்ற ஆல மரம் போல், தம் கடை பல கிளைகளாக பரவ வேண்டும் என்ற தொலை நோக்கு பார்வை இருந்ததாகவும் சொல்கிறார். ஆனந்த பவன் என்ற தங்கள் கடைக்கு 'அடையாறு' சேர்த்த அந்த நாள் முதல் அவர்கள் வியாபாரம்








ஒரு பொற்காலமாக மாறி பல தலைமுறை வாடிக்கையாளர்களை அவர்களுக்குக் கொண்டு சேர்த்தது என்றும் கூறுகிறார். சென்னையின் அருகாமையில் வசிப்பவர்கள் காலையில் 5.30 மணிக்கே வந்து, காலைச் செய்தித்தாளைப் படித்துக் கொண்டே, கதைப் பேசி விட்டு கடைக் கதவுத் திறக்கும் வரைப் பொறுமையாக காத்திருக்கும் அந்த வாடிக்கையாளர்கள் தங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்று சொல்கின்றனர். வாடிக்கையாளர்கள் மற்ற கடைகளை விடுத்து, தங்களின் வீட்டுக்கு அருகிலேயே இருக்கும் இவர்களின் கடையை நாடி வருவதைக் கண்டு, அவர்களின் எதிர்பார்ப்புக்கு மேல் அவர்களுக்கு சேவை செய்து அவர்களின் ஆதரவை தக்க வைத்து கொள்ள வேண்டும் என்ற உத்வேகம் இருந்ததாகவும் சொல்கின்றனர். ஸ்ரீ.வெங்கடேசன் அவர்கள் இயல்பாகவே செய்முறைகளை தொகுப்பதில் வல்லுனர். அவரின் தலைமையில் பல மாநிலங்களிலிருந்து சமையல்கலை வல்லுநர்கள், அவர்கள் மாநிலத்தின் பாரம்பரிய செய்முறைகளை தயார் செய்ய வேலைக்கு எடுக்கப்பட்டனர். இதனால் அவர்களின் சமையல் தொகுப்பில் வித விதமான பலகாரங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டது.....தெற்கு பகுதியின் அதிரசம் மற்றும் மைசூர் பாகு, கிழக்கு பகுதியின் ரசகுல்லா, மேற்கு பகுதியின் டிரை ஃப்ரூட் மற்றும் நட்ஸ், வடக்கு பகுதியின் மில்க் பேடா ஆகியவை. வியாபாரத்தில் லேசாக சரிவு வந்த போது, வாடிக்கையாளரின் நாடியை நன்கு அறிந்த ஸ்ரீ.வெங்கடேசன், அந்தந்த வயதினர் விருப்பம் என்ன என்று ஆய்வு செய்து, அவர்களுக்கு பிடித்தவாறு சத்தான ஆவியில் செய்த உணவு வகைகளை அறிமுகப்படுத்தினார். சாயங்காலம் சாப்பிட ஆரோக்கியமான உணவுப்பட்டியலும் தயார் செய்யப்பட்டது. ஸ்ரீ.வெங்கடேசன், ராஜபாளையம் தட்டை, பகோடா, தட்டு இட்லி, தோக்ளா என அந்தந்த ஊரின் சிறப்பு உணவுகளை கொண்டு வந்தது, அந்த ஊரை சேர்ந்தவர்களுக்கு அவர்களின் ஊரை/வீட்டை நினைவுப்படுத்தியது. தற்போது, அவர்களின் பலகாரங்கள் சில்லறை விற்பனை கடைகளில் விற்கப்படுகிறது. பலகாரங்கள் தயார் செய்ய வேறு வேறு சமையல் இடம் உள்ளது. AAB அல்லது A2B கடைகளில் பொருட்களின் விலை வித்தியாசப்படும்.

2020-ல், அவர்கள் நெடுஞ்சாலையில் கிளைகளைத் திறந்தது, அவர்களுக்கும், அந்த வழியில் பயணம் செய்பவருக்கும்....இருவருக்குமே சிறப்பாக அமைந்தது. தற்போது சென்னை மற்றும் பெங்களூரில் இரண்டு பெரிய தொழிற்சாலைகளும், கோயமுத்தூர் மற்றும் தஞ்சாவூரில் சிறிய தொழிற்சாலைகளும், டில்லியில் ஒரு சில்லறை விற்பனைக் கடையும் வைத்துள்ளார்கள். இப்போதைய காலத்துக்கு ஏற்றார் போல், டிஜிட்டல் உலகத்திலும் கால் வைத்து. வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப அவர்களுக்கு வேண்டியதை அவரவரின் வீட்டிலேயே விநியோகம் செய்ய, ‘A2B செயலியை’ அறிமுகப்படுத்தியுள்ளனர். அவர்களின் மேம்படுத்தப்பட்ட ஆய்வு துறை, ஏஜ இண்டர்ஃபேஸோடு கூடிய மைக்ரோபயாலஜி ஆய்வகம் கொண்டது. மிக அதிக வாடிக்கையாளரின் தேவைகளுக்கு ஈடு கொடுக்க, அவர்கள் அதி நவீன வசதிகள் மற்றும் ஆட்டமேஷன் பயன்படுத்துகின்றனர். நல்ல தரமான பொருட்கள் கொடுக்க வேண்டும் என்ற அவர்களின் நோக்கத்தால், ஒரு தடவை பயன்படுத்திய எண்ணெயை சுத்திகரிப்பு ஆலைக்கு கச்சா எண்ணெய் செய்யக் கொடுத்து விடுகின்றனர். எல்லோருக்கும் கட்டுப்படியாகும் வகையில், விற்கும் பொருட்களின் விலையை நிர்ணயிப்பதில் குறியாக இருக்கிறார்கள்.

விவசாய குடும்பத்திலிருந்து வந்ததால், அவர்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் பால் முதலியவை விவசாயிகளிடமிருந்தே வாங்குவதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள் என்று ஸ்ரீ.சீனிவாச ராஜா சொல்கிறார். "பசியும் பட்டினியும் அனுபவித்ததால், எங்களால் முடிந்ததை சமூகத்துக்கு திருப்பி தர வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். A2B யின் சி.எஸ்.ஆர் முயற்சிகள் மூலம் கிராமத்தில் நாங்கள் தத்து எடுத்துள்ள மருத்துவமனைகளில், நல்ல குடி நீர் வசதியும், சுகாதாரமும் இருக்குமாறு உறுதி செய்கிறோம். எனக்கும் அண்ணாவுக்கும் படிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் எங்களிடம் வேலை பார்ப்பவர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களில் இருப்போர் கல்வி கற்க வேண்டும் என்பதையும் உறுதி செய்கிறோம். அதே போல், இலவச சாப்பாடு அதாவது மூன்று வேளை உணவு அளிப்பதையும் ஆதரிக்கிறோம்." என்றும் சொல்கிறார்.

நன்றியுணர்வு, நேர்மை, கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, பொறுமை ஆகியவையே எங்கள் வெற்றிக்கான முக்கிய காரணிகள் என்று ஸ்ரீ.சீனிவாச ராஜா சொல்கிறார். கடினமான தருணங்களில் அவர்களின் விடாமுயற்சியே அவர்கள் வழிக்காட்டியாக இருந்து, அவர்களின் இலக்குகளை அடைய, முக்கியமாக அவர்கள் நிறுவனம் பொது நிறுவனமாக ஆகும் வாய்ப்பு பெற வழி வகுத்துள்ளது.

மிகப் பழையகால சமஸ்கிருத பழமொழியான, "மாதா, பிதா, குரு, தெய்வம்", என்பதே அவர்கள் வழிக்காட்டியாக நினைக்கும் துருவ நட்சத்திரம் ஆகும். அதோடு அவர்களின் நேர்மையான பணியாளர்கள், அதிலும் அவர்களோடு பத்தாண்டுகளுக்கு மேல் அவர்களுடனே இருப்பவர்கள், வாடிக்கையாளர்கள் காட்டும் அன்பு, மற்ற வியாபாரிகளுடனான நல்லுறவு என, இவை அனைத்துமே அவர்களின் வெற்றி பயணத்திற்கும், அனைத்து வளர்ச்சிக்குமான காரணங்கள்.

அடுத்த தலைமுறையினர் உள்ளே அடி எடுத்து வைக்க தயாராக இருக்கும் நிலையில், ஸ்ரீ.வெங்கடேசன் அவர்களின் மகன் விஷ்ணு சங்கர் நிறுவனத்தில் சேர்ந்திருப்பினும், முக்கிய முடிவுகளை சகோதரர்களாகிய நாங்களே இன்றும் எடுக்கின்றோம், என்று ஸ்ரீ.சீனிவாச ராஜா தெளிவுப்படுத்துகிறார். மற்ற நன்கு படித்த பிள்ளைகள் இதற்குள் நுழைய தக்க தருணத்திற்கு காத்திருக்கின்றனர். நிறுவனத்தின் மூத்த பணியாளர்கள் மற்றும் மேலாண்மை குழுவில் இருப்பவர்களும் இந்த நிறுவனத்தின் முதுகெலும்பாக இருக்கின்றனர்.

தெற்கு தமிழகத்தில் இருக்கும் ராஜபாளையம் என்ற சிறிய நகரத்திலிருந்து வந்த எளிமையான ஒருவரால் தொடங்கப்பட்டு இன்று A2B எங்கும் பரவி இருக்கிறது . படிப்பறிவற்ற இந்த கிராமத்தினர் தாங்கள் கடந்து வந்த பாதையை நினைவு கூர்ந்து, தங்களுக்கு கிடைக்கப்பெற்ற வாய்ப்புகளுக்கும், ஆசீர்வாதங்களுக்கும், அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கும் தங்களின் மனமார்ந்த நன்றியைக் கைகூப்பி தெரிவித்து கொள்கின்றனர்.

சுபாஷினி கோமேஸ்வரன்